**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.167** **நாள் : 26.05.2026**

**மாண்புமிகு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சர் திரு.ஸ்ரீநாத் அவர்கள், மாண்புமிகு செயற்கை நுண்ணறிவு தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் ரா.குமார் அவர்கள் திருவான்மியூர் குப்பம் பகுதியில் அடிப்படை வசதிகள் தொடர்பாக இன்று ஆய்வு மேற்கொண்டனர்.**

மாண்புமிகு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சர் திரு.ஸ்ரீநாத் அவர்கள், மாண்புமிகு செயற்கை நுண்ணறிவு தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் ரா.குமார் அவர்கள் அடையாறு மண்டலம், வார்டு-179க்குட்பட்ட திருவான்மியூர் குப்பம் பகுதியில் அடிப்படை வசதிகள் தொடர்பாக இன்று (26.05.2026) ஆய்வு மேற்கொண்டு மக்களிடம் கலந்துரையாடினர்.

இப்பகுதியில் வசிக்கும் மக்கள் தங்கள் குடியிருப்புப் பகுதிக்கு சாலை வசதி, தெருவிளக்கு வசதி, பாதாள சாக்கடைத் திட்டம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் தொடர்பான கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு அமைச்சர் பெருமக்களிடம் தெரிவித்து கோரிக்கை மனுக்களை வழங்கினர். மக்கள் தெரிவித்துள்ள கோரிக்கைகள் தொடர்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என மாண்புமிகு அமைச்சர்கள் தெரிவித்தனர்.

இந்த ஆய்வின் போது, துணை ஆணையாளர் (பணிகள்) திரு.வி.சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப.,தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., மற்றும் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**